1991 செப்டம்பர் 13] [டாக்டர் எம். கருப்புசாமி]

அதனுடைய "migration, isolation, identification, if it is necessary easy catch" என்ற முறைப்படி அவர்கள் முயன்றார்கள். அந்தச் சமயத்தில் இரண்டு புலிகள் அங்கு இறந்துவிட்டதால் அதைப் பற்றி கர்நாடக சட்டமன்றத்தில் பெரிய பிரச்சினை எழுப்பப்பட்டு அது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அதே போன்று விஞ்ஞான முறைப்படி விலங்குகளுடைய கழுத்தில் பட்டைகள அணிவிக்கப்படுமானால் அந்தப் புலிகளின் நடமாட்டம் வெகுவாக கட்டுப்படுத்தப்படும். அது ஊருக்குள் நுழைந்தவுடனே பிடித்துவிடுவார்கள். காலையில் முழு உடம்போடு செல்பவர்கள் எல்லாம் மாலை வேளையில் புலிகளால் தாக்கப்பட்டு வெறும் எலும்புக் கூடுகளாக, சதைப் பிண்டங்களாக இரத்தக் கோளங்களாக மாறி வருகிறார்கள். கொல்லப்பட்ட அனைவரும், 3 பேரும் இளம் பெண்கள்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே அதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும். அதே போல நீலகிரி மாவட்டத்து தோட்டத் தொழிலாளர்கள் எல்லோரும் ஏழைப்பட்டவர்கள், பாவப்பட்டவர்கள். அவர்களுக்கு முதல்வர் அவர்களுடைய நிவாரண நிதியிலிருந்து ஒரு சிறு தொகையை அளித்து அந்த ஏழைகளின் குடும்பத்தைக் காப்பாற்றவும் மிகவும் தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் சொல்லுகிற யோசனை மீது ஏதாவது கருத்து இருந்தால் வன இலாக்கா அமைச்சர் சொல்லலாம்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வன உய்விடங்களிலும், தேசிய பூங்காக்களிலும் கிட்டத்தட்ட 107 சிறுத்தைகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் கூறியது போல கர்நாடகா அரசில் அது ஆராய்ச்சிக்காகத்தான் பயன்பட்டு வருகிறது. அந்த வகையிலே நாம் சிறுத்தைகளைப் பிடித்து அதன் கழுத்தில் பெல்ட் கட்டுவதன் மூலம் செய்ய முடியாது. எல்லா சிறுத்தைகளையும் பிடித்து பெல்ட் கட்டி அதனுடைய மூவ்மென்ட்சை நாம் அறிய முடியாது. அந்த வகையிலே இந்த திட்டத்திற்கு சாத்தியக்கூறு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. கவன ஈர்ப்பு

பரமக்குடி, இராமநாதபுரம் பகுதியில் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க வைகையாற்றில் தண்ணீர் திறந்துவிட வேண்டியதன் அவசியம் குறித்து,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து கவன ஈர்ப்பு. டாக்டர் ச. சுந்தரராஜ், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். டாக்டர் ச. சுந்தரராஜ்.

டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமக்குடியிலும் மற்றும் இராமநாத புரம் மாவட்டத்திலும் குடிநீர் கிடைக்காததால், மக்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதிலே இருப்பதை அப்படியே படியுங்கள். பேசக்கூடாது.

டாக்டர் ச. சுந்தரராஜ் : பேரவைத் தலைவர் அவர்களே, "பரமக்குடி மற்றும் இராமநாதபுரம் பகுதிகளில் குடிநீர் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு வைகை ஆற்றில் தண்ணீர் திறந்து விட மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களை, தங்கள் மூலமாக....."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ".... அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்" என்றுகூற வேண்டும்.

டாக்டர் ச. சுந்தரராஜ் : அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

முற்பகல் 10–40

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து கீழ்க்கண்ட அறிக்கை அவையின்முன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

தற்போது கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பாசனத்திற்குத் தண்ணீர் விடப்படுகின்றது:

			ஏக்கர்.
கம்பம் பள்ளத்தாக்கு	..	..	14,707
பெரியார் பிரதான கால்வாய்—			
1. இருபோக சாகுபடி பகுதி	..	..	45,041
2. ஒரு போக சாகுபடி பகுதி	..	..	85,563
மொத்தப் பகுதிகள்	..	..	1,45,311

2. பெரியார் மற்றும் வைகை அணைக்கட்டுகளில் 27–8–91 அன்றுள்ள நிலவரப்படி தண்ணீர் இருப்பு வருமாறு :

			மி.க.அடி
பெரியார்	..	..	4,773
வைகை	..	...	2,801
மொத்தம்		..	7,564

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தண்ணீர் இருப்பு மற்றும் 75 விழுக்காடு நம்பகத்தன்மையில் எதிர்பார்க்கும் வரத்து இவைகளிலிருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. அக்டோபர் திங்கள் முதல்—பாதி வரை தண்ணீர் விடமுடியும். மேற்கொண்டு பாசன நடவடிக்கைகள் வடகிழக்குப் பருவ மழையினைப் பொறுத்துள்ளது.

3. இராமநாதபுரம் தண்ணீர் வழங்கு திட்டத்தின் தலை மதகு பொட்டித் தட்டியில் உள்ளது. அது பேரணை மதகணையிலிருந்து 140 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. வைகை 150 முதல் 200 மீட்டர் அகலமும், நதி மிகவும் வறண்டுள்ளதால் தண்ணீர் சென்றடைவதில் மிகுந்த இழப்பு ஏற்படும். இப்போதுள்ள வறண்ட நிலையில் மாவட்ட ஆட்சித்தலைவர் இராமநாதபுரம் அவர்கள் கருத்துரைப்படி 1000 மி.க. அடி தண்ணீர் திறந்துவிடப்பட்டாலும் போதுமானதாக இராது. இராமநாதபுரம் தண்ணீர் வழங்கு திட்டத்தின் தலை மதகு சென்றடைய குறைந்தது 1,400 மி.கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டாலே முடியுமென தல அதிகாரிகள் கருத்து தெரிவித்துள்ளனர். அவ்வாறு 1,400 மி.க. அடி தண்ணீர் திறந்துவிடப்பட்டால் வைகை அணையின் நீர்த்தேக்க அளவு மிகவும் குறைந்துவிடும். ஏற்கனவே திறந்து விடப்பட்ட பாசன நிலங்களுக்கு தண்ணீர் அளிப்பது மிகவும் கடினமாகப் போய்விடும். இவ்வாறு தண்ணீர் திறந்துவிடப்பட்டால் திருமங்கலம் பிரதானக் கால்வாய் மற்றும் பி.டி. இராஜா கால்வாய் இவைகளுக்கு மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கருத்துரைப்படி செப்டம்பர் திங்கள் 15 ஆம் நாள் தண்ணீர் திறந்து விடப்படுவது தடைப்படும். இதுவன்றி புதிதாக உலக வங்கி உதவியுடன் மேம்பாடு செய்யப்பட்ட 38,200 ஏக்கர் நிலங்களுக்கு தண்ணீர் அக்டோபர் திங்கள் 15 ஆம் நாள் திறந்து விடப்படுவது காலவரையின்றி தள்ளி வைக்கப்பட வேண்டி வரும்.

4. வைகை நீர்த்தேக்கத்தில் சேமிப்பு இல்லாததாலும். அண்மைக் காலத்தில் தண்ணீர் வரத்தினால் சேமிப்பு அதிகமாவதற்கும் வகையில்லை, ஆகையால் பெரியார் சேமிப்பிலிருந்து தான் தண்ணீர் திறந்துவிடப்பட வேண்டும். மதுரை மற்றும் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டங்களிலுள்ள பாசன பரப்புகளுக்கு செப்டம்பர் திங்கள் 15 ஆம் நாள் திறக்க வேண்டிய திருமங்கலம் பிரதான கால்வாய் மற்றும் பி.டி.ராஜன் கால்வாய் பாசனங்களை அது பாதிப்பதுடன் உலக வங்கி உதவியுடன் கூடிய புதிய பாசன திட்டங்களையும் அது பாதிக்கும். அதுமட்டுமல்லாமல் 1,45,311 ஏக்கர் பாசன பரப்புகளில் தண்ணீர் பற்றாக்குறையின் காரணமாக வளர்ச்சி அடைந்த கதிர்கள் பாதிக்கப்படும். எனவே வைகை நதியிலிருந்து இராமநாதபுரம் பகுதிகளுக்கு குடி தண்ணீருக்காக தண்ணீர் திறந்து விடப்படுவதை வைகை நீர்த்தேக்கத்திற்குப் போதுமான தண்ணீர் வரத்து வரும் வரை பொறுத்திருக்கலாமென அரசு கருதுகிறது.

[1991 செப்டம்பர் 13

டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அஞ்சாமை, ஈகை, அறிவுடைமை ஆகிய கொள்கைகளைக் கொண்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு கஷ்டப்படுகிற மக்களுக்கு, இன்னல்படுகிற மக்களுக்கு அவர்களுடைய கஷ்டங்களையும் இன்னல்களையும் துடைக்கின்ற அரசாகச் செயல்பட்டு வருவதனால் இராமநாதபுரம் மாவட்டத்தில் கிட்டத்தட்ட இந்தியா சுதந்திரம் அடைந்ததிலிருந்து குடிநீர்ப் பிரச்சினையால் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். நாள்தோறும் பல இலட்சம் ரூபாய் குடிநீருக்காகச் செலவு செய்யப்படுகின்றது....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்

டாக்டர் ச. சுந்தரராஜ் : ஆகவே, அவ்வாறு நிரந்தரமான ஒரு திட்டம் இல்லாமல் இருக்கின்றது. இப்போது வைகைப் பகுதியில் நன்றாக மழை பெய்து நீர்த்தேக்கங்களில் நீர் நிரப்பப்பட்டு இருக்கின்றது. இதற்கு முன் 1990 ஜூலையில் கூட அருப்புக்கோட்டைக்கு தண்ணீர் குடிநீருக்காகத் திறந்துவிடப்பட்டது. 1989-ல் கூட குடிநீருக்காக இராமநாதபுரம் மாவட்டத்துக்கு தண்ணீர் திறந்துவிடப்பட்டது. கிட்டத்தட்ட வைகை அணை கட்டுவதற்கு முன்பு வைகை அணையிலிருந்து இந்த நீர் அனைத்தும் இராமநாதபுரம் மாவட்ட மக்கள்தான் பயன்படுத்திக்கொண்டு வந்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் தான் விளக்கம் கொடுத்து இருக்கிறார்கள். அதிலே உங்களுடைய கேள்வி என்ன என்பதை மட்டும் நீங்கள் கேளுங்கள்.

டாக்டர் ச. சுந்தரராஜ் : இராமநாதபுரம் மாவட்டத்தின் குடிநீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கின்றது. வைகை அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிட வேண்டும். அவ்வாறு வைகை அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடவில்லை என்றால் இராமநாதபுரம் மாவட்ட மக்களின் குடிநீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரு ஸ்பெஷல் ஜி. ஓ. போட்டு பெரியார் நீர்த் தேக்கத்திலிருந்தாவது தண்ணீர் விடுவதற்கு இந்த அரசு முன்வருமா? மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இதைக் கருணையோடு பார்த்து குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இந்த அறிக்கையில் கூறியபடி கீழ்க்கண்டவாறு பாசனத்திற்கு தண்ணீர் விடப்படுகின்ற விவரத்தை நான் இந்த அவைமுன் தெரிவித்துக்கொள்வது எனது கடமை என்று கருதுகின்றேன். கம்பம் பள்ளத்தாக்குப் பகுதியில் 14,707 ஏக்கருக்கும் பெரியார் பிரதம கால்வாயில் இரு

1991 செப்டம்பர் 13] [திரு எஸ். கண்ணப்பன்]

போக சாகுபடிக்கு 45,041 ஏக்கருக்கும், ஒரு போக சாகுபடிப் பகுதிக்கு 85,563 ஏக்கருக்கும் ஆக 1,45,311 ஏக்கர்களுக்கு தண்ணீர் திறந்துவிடப்படுகின்றது. தண்ணீர் இருப்பு மட்டும் 75 விழுக்காடு நம்பகத் தன்மையில் எதிர்பார்த்துத்தான் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. அக்டோபர் திங்கள் முதல் பாதி வரைதான் தண்ணீர் திறந்துவிடமுடியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல இன்றைக்கு பெரிய அளவிலே மழை பெய்து தண்ணீர் இல்லை. இராமநாதபுரம் மாவட்டத்துக்கு தண்ணீர் திறந்துவிடுகிற நேரத்திலே இராமநாத புரத்திற்கு தண்ணீர் வழங்கும் திட்டத்தின் தலை மதகு பொட்டித்தட்டியில் உள்ளது அதுபேரணை மதகிலிருந்து ஏறத்தாழ 140 கி.மீ. தூரம் உள்ளது. வைகை நதி 150 முதல் 200 மீட்டர் அகலம் இருக்கின்றது. நதி மிகவும் வரண்டுள்ளதால் தண்ணீர் சென்று அடைகின்ற நேரத்திலே அதிகமான தண்ணீரை உறிஞ்சக் கூடிய அளவுக்கு ஒரு வாய்ப்பு இருக்கின்ற ஒரு சூழ்நிலை அமைந்து இருக்கிறது. கலெக்டர் கருத்துப்படி பார்த்தாலும் கூட ஆயிரம் லிட்டர் கன அடி தண்ணீர் திறந்துவிட வேண்டி இருக்கின்றது. ஆக, அந்த அளவுக்கு நாம் தண்ணீரை திறந்து விடுவோமேயானால் ஏற்கெனவே பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விட்டு பயிர் செய்து இருக்கின்ற பயிர்களுக்கு பிற்காலத்தில் அதற்குரிய தண்ணீரை திறந்துவிட முடியாமல் உணவு உற்பத்தி பாதிக்கப்படும். ஆகவே தற்போது உள்ள சூழ்நிலையில் அவ்வளவு தூரம் தண்ணீர் திறந்துவிடுவதற்கு அத்தியாவசியம் இல்லை என்ற காரணத்தினாலே தான் இன்றைக்கு இயலாத நிலையில் அரசு இருக்கின்றது. மழை பெய்து நிலைமை சீரடையுமேயானால் அது குறித்து இந்த அரசு மிகுந்த கவனத்தோடு பரிசீலித்து ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ச. சுந்தரராஜ்.

டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற அரசு அந்த விவசாயம் செய்கின்ற மக்களுக்கு குடிநீர் கொடுக்க கட்டாயம் முன்வர வேண்டும். ஆகவே நீங்கள் குடிநீருக்கு முக்கியத்துவம் கொடுப்பீர்களேயானால் குடிநீருக்காகக் கொடுக் கின்ற தண்ணீர் கிட்டத்தட்ட அந்தப் பகுதியில் விவசாயம் செய் வதற்கும் பயன்படும். அவ்வாறு அந்தத் தண்ணீர் விவசாய உற் பத்திக்குமட்டுமல்லாது குடிநீருக்கும் முக்கியத்துவம் கொடுக்கின்ற வகையில் உறுதி செய்வதாக இருப்பதால் கட்டாயம் இப்போது நீர்நிலை கிட்டத்தட்ட 42 அடி உயர்ந்துள்ளது; நேற்றுக்கூட ஒரே நாளில் 5 அடி உயர்ந்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. அந்தப் பகுதியில் வருகின்ற 15 ஆம் தேதி குடிநீருக்காக, விவசாயத்துக் காக தண்ணீர் திறந்துவிட இருக்கிறார்கள். ஆகவே விவசாயத் துக்குத் இப்போது திறந்துவிடுகின்ற, திருமங்கலம் வரை வருகின்ற தண்ணீர் கட்டாயம் எங்களுக்கு நீங்கள் ஆயிரம்

டி. எம்.சி. தண்ணீர் கூட கொடுக்க வேண்டியதில்லை; 700 டி.எம். சி. தண்ணீர் கொடுத்தாலே எங்களுடைய குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க முடியும் ஆகவே கருணை உள்ளம் கொண்ட புரட்சித் தலைவி அவர்களின் அரசு அந்த இராமநாதபுரம் மாவட்ட மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கட்டாயம் முன்வர வேண்டும்; தண்ணீர் விடவேண்டும் என்று அவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பி.டி. ராஜன் கால்வாயில் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கருத்துப்படி செப்டம்பர் திங்கள் 15 ஆம் நாள் வந்து தண்ணீர் திறந்துவிடப்படும். இதுபோக புதிதாக உலக வங்கியின் கடனில் மேம்பாடு செய்யப்பட்ட 3,80,200 ஏக்கர்களுக்கும் நாம் பாசனத்திற்கு தண்ணீர் விட வேண்டி இருக்கின்றது. அந்தத் தண்ணீர் அக்டோபர் திங்கள் 15 ஆம் தேதி திறக்கப்பட வேண்டியிருக்கிறது. ஆகவே, இவைகளை எல்லாம் நாம் கருத்தில் வைத்துதான் குடிதண்ணீருக்குத் தண்ணீர் திறந்து விடுவதைக் குறித்து ஆலோசனை செய்ய முடியும்.

முற்பகல் 10-45

நான் ஏற்கெனவே சொன்னதைப் போல ஏறத்தாழ 1,400 மில்லியன் கன அடி தேவைப்படுகிறது அங்கே தண்ணீர் திறந்து விட வேண்டுமென்றால் என்று அதிகாரிகள் தெரிவித்து இருக்கிறார்கள். மழை பெய்திருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நான் ஏற்கெனவே சொன்னதைப் போல இதை நிரந்தரமாக நாங்கள் மறுக்கவில்லை. பருவ மழை அதிகமாகப் பெய்து நீர்த் தேக்கத்தில் விவசாயத்திற்கு ஏற்கெனவே நான் குறிப்பிட்ட இலக்குகளுக்கு போதுமான அளவு தண்ணீர் இருந்தால் அதிகமாக இருக்கிற தண்ணீரைத் திறந்து விடுவது பற்றி மிகுந்த கவனத்தோடு, தாய் உள்ளத்தோடு இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. அறிவிப்பு

1991-92 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளை மொழிவது குறித்து ஆளுநரின் செய்தி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1991-92 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். பேரவைக்கு ஓர் அறிவிப்பு :

1991-92 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது.